வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.12.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 361 பக்கங்கள் : 12




# 13ஆவது திருத்தம் குறித்து இந்தியா பேசாமல் இருந்தால் பெருமகிழ்ச்சி!

## தமிழர்கள் விரைவில் சிறந்த தெரிவொன்றை கண்டறிய முடியும் என்கிறார் கஜேந்திரகுமார்




கொழும்பு, டிசெம்பர் 27

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இனி மேல் பேசாமல்விட்டால் அதனால் பெருமளவுக்கு மகிழ்ச்சியடையக்கூடிய ஒருவராக தானே இருப்பார் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவு செய்திருக்கிறார். தங்களது பிரச்னைக்கு தீர்வாக 13ஆவது திருத்தத்தை பெரும்பான்மை யான தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை என்றும் அவர் குறிப் பிட்டிருக்கிறார்.

மூன்று வருடங்களில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாண சபைகள் முறை தொடர்ந்து இருக்கும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறிக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. மாகாணசபை தேர்தல் களை நடத்தி 13 வது திருத்தத்தை சாத்தியமா னளவு அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவ தன் மூலம் அரசாங்கம் இது விடயத்தில் ஓரளவு நம்பகத்தன்மையைப் பெறமுடியும் என்று பத்தி ரிகையாளர் ஒருவர் எக்ஸ் தளத்தில் செய்த பதிவுக்கு

11



## ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஊடகங்களுக்கு அனுமதி இல்லை

- பு.கஜிந்தன் -

கிளிநொச்சி, டிசெ. 27

இனிமேல் ஊடகவியலாளர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அபவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் அனுமதி இல்லை என யாழ்ப்பணம் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கடற் றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டம் நேற்று நடைபெற்றது. இதன்போது பாராளு மன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும்,

11

## இராணுவ நினைவுச் சின்னம் அகற்றப்பட்டு கலாசார மண்டபம் அமைக்கப்படவேண்டும்

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

- பு.கஜிந்தன் -

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சியில் இராணுவ நினைவுச் சின்னத்தை அகற்றி அந்த இடத்தில் கலா சார மண்டபம் அமைக்கப்படவேண்டும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரி வித்தார்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இந்த கோரிக் கையை விடுத்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்-

கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஒரு இராணுவ நினைவுச் சின்னம்

11

## கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நேற்று அமைதியின்மை

### அர்ச்சுனா எம்.பி - சகாதேவன் கருத்து மோதல்

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் நேற்று பனை அபி விருத்திச் சபையின் தலைவர் சகாதேவ னுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனாவுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இதன்போது சகாதேவன் அர்ச்சு னாவை பார்த்து, பாராளுமன்ற உறுப் பினர்போல இல்லாமல் நீங்கள் ஏன் பைத்தியக்காரத்தனமாக பேசுகின்றீர்கள் என்று கூறினார். அதற்கு பதிலாக " சட்



அப்" (வாயை மூடுங்கள்) என்று அர்ச்சுனா கூறினார்.

இதன்போது குறிக்கிட்ட தம்பிராசா, "ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மக் களால் தெரிவுசெய்யப்பட்டவர்

11

## யாழில் நான்கு நாள் காய்ச்சலால் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 27

நான்கு நாட்கள் தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இதன் போது கைதடி மேற்கு, கைதடி பகுதியைச் சேர்ந்த நாக ரத்தினம் தனுசன் (வயது 34) என்ற இரண்டு பிள் ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த 23ஆம் திகதி காய்ச்சல்

11

## யாழில் எலிக் காய்ச்சல் தாக்கம் கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ். மாவட்டத்தின் கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி பகுதிகளில் அண்மைக் காலமாக ஏற்பட் டிருந்த எலிக் காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ் வரன் தெரிவித்தார்.

தற்பொழுது, காய்ச்சல் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுபவர்களின்

11

## யாழில் மூன்று மாதங்கள் நிரம்பிய ஆண் குழந்தை பரிதாபமாக மரணம்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 27

பிறந்து மூன்று மாதங்களே நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் பரிதாபமாக உயிரிழந் துள்ளது. பன்னாலை, தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த பங்கஜன் சிறீதிகன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரி ழந்துள்ளது.

இந்த குழந்தைக்கு கடந்த 24ஆம் திகதி காய்ச் சல், இருமல், சளி ஏற்பட்டது. அதற்கு சிகிச்சை வழங்குவதாக பெற்றோர் குழந்தையை

11

## மன்மோகன் சிங் காலமானார்



புதுடில்லி, டிசெ. 27

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவரு மான மன்மோகன் சிங், உடல் நலக்குறைவால் நேற்று காலமானார்.

புகழ்பெற்ற பொருளாதார நிபு ணரும் அரசியல்வாதியுமான மன் மோகன் சிங்கின் உடல்நிலை மோச மடைந்ததை அடுத்து நேற்று மாலை டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

11

## ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனை வாகனத்தில் கடத்துவதற்கு முயற்சி

### தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனை ஏ-9 வீதி ரெலிக்கொம் முன்பாக கறுப்பு வாகனத்தில் கடத்த முற்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

கடத்த முற்பட்டவேளை அவர் தப்பிக்க முயற்சி செய்த போது கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் கிளி நொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

11

## உங்கள் காணி முப்படை வசம் இருந்தால் அறியத் தாருங்கள்!

### காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

முப்படையினரின் வசம் தங்களின் காணிகள் இருக்கு மாயின் அது குறித்த உரிய தகவல்களை அறியத்தருமாறு வமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இ.முரளிதரன் பொதுமக்களிடம் கோரியுள் ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை யில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உத்தியோகத்தர்களுக்கு நியாயமற்ற இடமாற்றங்கள்!

**ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு**

கொழும்பு, டிசெ. 27

அரச உத்தியோகத்தர்களுக்கு நியாயமற்ற முறையில் கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசாங்க மற்றும் மாகாண சபை துறைகளில் பணிபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத, நியாயமற்ற அடிப்படையில் இடமாற்றம் வழங்கும் திட்டமிட்ட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தெரியவருகிறது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் போன்ற பதவி நிலை அதிகாரிகள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. அரச சேவையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இவ்வாறு செயற்படுவது பிரச்னைக்குரியது.

இன்னமும் முடிவடையாத மற்றும் விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் தற்போது நடைபெறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான வாக்கெடுப்பும் நடைபெறுகிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில் அரச சேவையில் துரித அரசியல்மயமாக்கல் நடைபெறுகின்றது.

எதிர்வரும் தேர்தல்களை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டமாக அரசாங்கம் செயற்படுத்துவது தெளிவாகத் தெரிகிறது. இந்த இடமாற்றங்களால் அந்தந்த துறைகளின் சேவை வழங்கல்களில் பிரச்சினைகள் எழுவதோடு மட்டுமல்லாமல், அந்த உத்தியோகத்தர்களும் தனிப்பட்ட முறையில் பல பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பது தெரிகிறது.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கவனம் செலுத்தியுள்ளதுடன், இத்தகைய சம்பவங்களை ஆராய்வதற்கு விசேட பிரிவொன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக பெயர் குறிப்பிட்டோ அல்லது பெயர் குறிப்பிடாமலோ தகவல்களை வழங்க எவருக்கும் வாய்ப்பு



வழங்கப்படும். அரச சேவையில் இடமாற்றங்கள் நடைபெற வேண்டிய ஒன்றாக இருந்தாலும், அது மறைமுக நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நடைபெறுமாயின், அது குறித்து நடவடிக்கை எடுப்பது எதிர்க்கட்சியின் பொறுப்பாகும். அத்துடன் அரசாங்க மற்றும் மாகாண சபை மட்டத்தில் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் அனைத்து இடமாற்றங்களையும் நிறுத்துமாறு நாம் அரசாங்கத்தையும் மாகாண சபை அதிகாரபீடங்களையும் வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது. (அ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆழிப்பேரலை நினைவு!

யாழ்ப்பாணம், டிசெ. 27

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி உலகத்தின் பெருமளவான பகுதிகளைப் பேரழிவுக்கு உள்ளாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவர்களுக்காக ஒளிச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ-05)





## முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்திலும் நேற்று உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல்

முல்லைத்தீவு, டிசெ. 27

ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்களின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறி அழுது கண்ணீர் மல்க, தமது உயிரிழந்த உறவுகளுக்கு மலர் தூவி, தீபமேற்றி, உணவுப் பொருட்களைப் படையலிட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலிகளை மேற்கொண்டனர்.

அதேவேளை உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திவேண்டி மத வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்த அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் இராஜஜோகினி ஜெயக்குமார், முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் நடராசா தசரதராஜகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## பண்டிகைக் காலத்தில் நாளாந்தம் கொழும்பில் 600 தொன் குப்பைகள்

கொழும்பு, டிசெ. 27

பண்டிகைக் காலங்களில் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நாளாந்தம் 600 தொன் குப்பைகள் சேகரிக்கப்படுவதாக குறித்த மாநகர சபை ஆணையாளர் பாலித நாணயக்கார தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் நகரில் குப்பைகள் சேகரிக்கப்படுவது அதிகரித்து வருவதாகவும், நாளொன்றுக்கு சராசரியாக 500 தொன் குப்பைகள் சேகரிக்கப்படுவதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில், டிசெம்பர் 31ஆம் திகதி இரவு, காலி முகத்திடல் மைதானத்தில் ஒன்று கூடுபவர்கள் விட்டுச் செல்லும் குப்பைகளை அகற்ற சுமார் 150 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

தொழிலாளர்கள் விடியும் வரை குப்பைகளை அகற்றி விட்டு மறுநாள் காலை 6:00 மணிக்குள் கொழும்பை அழகிய நகரமாக மாற்றுவார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த இடங்களில் சேரும் குப்பைகளை உரிய முறையில் தொட்டிகளில் போட வேண்டும் அல்லது அவற்றை எடுத்துச் செல்ல முன்வர வேண்டும் என அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## ஆழிப்பேரலை காவு கொண்டோருக்கு வடமராட்சி கிழக்கு பகுதியில் அஞ்சலி





வடமராட்சி, டிசெ. 27

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் 800 இற்கும் அதிகமானோரை காவு கொண்டோரின் அஞ்சலி நிகழ்வு வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள உடுத்துறை பகுதியில் நேற்று காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகியது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் தலைமையில் இடம் பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பொது நினைவுத் தூபிக்கான மலர்மாலையை மருதங்கேணி பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி, ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன், ஈ.பி.டி.பி. பேச்சாளர் ஐ.சிறீரங்கேஸ்வரன் உட்பட பலர் அணிவித்ததை தொடர்ந்து தேசிய கொடியை மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றியதை தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

ஈகச்சுடரை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம சேவகர் தோமஸ் யூட் ஏற்றியதை தொடர்ந்து சம நேரத்தில் உயிர் நீத்த மக்களுக்கான சுடர்கள் ஏற்றப்பட்டன.சமநேரத்தில் சுடர்கள் ஏற்றப்பட்டன.



நினைவேந்தலில் வணபிதாக்கள், கட்சிகளின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் உயிரிழந்தவர்களின் உறவுகள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, உடுத்துறை பத்தாம்கட்டை மருதங்கேணி தாளையடி மணல்காடு ஆகிய ஆகிய இடங்களில் அமைந்துள்ள நினைவிடங்கள் பொது மக்களால் அஞ்சலிக்கப்பட்டன. (அ-02)

## யாழ். மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 27

தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டன.

சுனாமி அனர்த்தத்தின் போது இறந்தவர்களை நினைவு கூருவதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லாசி வேண்டும் முகமாக, மார்கழி 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு வருடாந்தோறும் தேசிய ரீதியாக நினைவுகூரப்பட்டு வருகின்றது.

அதற்கமைய, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தலைமையில் நேற்று காலை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டபதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார்.

இதன்போது அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதோடு சர்வமதப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இதன்போது சர்வமத தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.12.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பேரவை தொடக்கம் பொதுச் சபை வரையில்

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வாலோசனையை முன்வைத்து ஏனைய கட்சிகளுடன் பேசும் முயற்சியை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கெண்டுவருகின்றார். இந்த அடிப்படையில் அவர் பேசக் கூடிய இரண்டு பிரதான கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசியிருக்கின்றார். அதாவது தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வாலோசனையை முன்வைத்து அரசாங்கத்துடன் பேச வேண்டும் என்பதுதான் பொன்னம்பலத்தின் நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதுதான் அவரது விருப்பம்.

விக்னேஸ்வரன் தலைமையிருந்த தமிழ் மக்கள் பேரவை என்பது, ஒரு தோல்வியடைந்த அமைப்பாகும். அது காணமால் போய் வெகு காலமாகின்றது. ஓர் அமைப்பு ஏன் தோல்வியுறுகின்றது? ஒரு குறிப்பிட்ட அமைப்பு முன்வைக்கும் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்லும் ஆற்றலை இழந்து போகும்போதுதான் அந்த அமைப்பு செயலிழந்து, இறுதியில் காணாமல் போகின்றது. தமிழ் மக்கள் பேரவையும் அப்படிக் காணாமல் போன அமைப்புக்களில் ஒன்று. தமிழர் அரசியலில் இவ்வாறு காணாமல்போன அமைப்புக்கள் பல.

இவ்வாறு காணமால்போன அமைப்புக்கள் முன்வைத்த கோரிக்கைகளை முன்வைத்து கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சி அடிப்படையிலேயே முரண்பாடானது. தமிழ் மக்கள் பேரவையின் தீர்வாலோசனை தயாரிப்பில் பல கட்சிகள் பங்கு கொண்டிருந்தன - அவ்வாறு பங்குகொண்ட கட்சிகள் அனைத்தும் இப்போது ஒவ்வொரு மூலையில் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான தமிழ்த் தேசிய கூட்டணி ஒன்றை உருவாக்கும் நோக்கில்தான் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. இறுதியில் விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கே பேரவை பயன்பட்டது. விக்னேஸ்வரனின் தனிக் கட்சியுடன் தமிழ் மக்கள் பேரவையின் கதை முடிந்துவிட்டது.

இதன் பின்னர் பேரவையின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு முன்நோக்கிச் செல்லப் போவதாகக் கூறி உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் தமிழ் மக்கள் பொதுச் சபை. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியை மேற்கொண்டு, அந்தப் பொது வேட்பாளர் கோஷத்தின் கீழ் ஒரு தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிடப்பட்டது. இதில் காங்கிரஸ் தவிர்ந்த, பேரவையில் அங்கம் வகித்த கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டிருந்தன. மேற்படி இரண்டு அமைப்புக்களிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக பங்குபற்றியிருக்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வாலோசனையில் தமிழ் அரசுக் கட்சியின் பங்குபற்றல் இருந்திருக்கவில்லை. அதேபோன்று, தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பிலும் தமிழ் அரசுக் கட்சி பங்குகொள்ளவில்லை. தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் இரண்டு முயற்சிகளுமே தேவையற்றது. இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சிதான் இன்றைய நிலையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதான கட்சி - ஏனெனில் ஒப்பீட்டடிப்படையில் எட்டு ஆசனங்களை தமிழ் அரசுக் கட்சி கொண்டிருக்கின்றது.

ஜனநாயக ரீதியில் நோக்கினால் தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவு அந்தக் கட்சிக்குத்தான் உண்டு. அரசியல் தீர்வு மற்றும் அதனை எந்த அடிப்படையில் முன்னெடுப்பது என்னும் விடயங்களுக்கு தலைமை தாங்கும் தகுதியும் அவர்களுக்குத்தான் உண்டு. தமிழ் அரசுக் கட்சிதான் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விட வேண்டும். ஆனால் பொன்னம்பலத்தின் அணுகுமுறையோ வேறு. தோல்வியுற்று காணாமல்போன அமைப்பு ஒன்றினால், அன்றைய சூழலில் முன்வைக்கப்பட்ட ஓர் ஆவணத்தை முன்வைத்து, அவற்றை ஆரம்பத்திலிருந்தே ஏற்றுக் கொள்ளாத கட்சிகளை அணுக முற்படுவது அடிப்படையிலேயே தவறானதொரு அணுகுமுறையாகும். தமிழ் மக்கள் பேரவை தொடக்கம் தமிழ் மக்கள் பொதுச் சபை வரையிலான சிவில் சமூகத் தலையீடுகள் அனைத்துமே படுமோசமான தோல்வியிலேயே முடிவுற்றது. ஒற்றுமையின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாறான முன்னெடுப்புக்கள் அனைத்துமே, இறுதியில் உள்ளதையும் கெடுத்தானாம் ஆண்டி என்பதாகவே முடிவுற்றது.

# கௌதாரி முனையில் இனிமேல் மண் அகழ்வுக்கு அனுமதியில்லை

## அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ.27

கிளிநொச்சி, கௌதாரி முனையில் மண் அகழ்வுக்கு இனிமேல் அனுமதி கொடுக்க வேண்டாம் என்று மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.



நேற்றைதினம் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கௌதாரி முனை ஒரு முக்கியமான பிரதேசம். அந்த இடம் சம்பந்தமாக உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே, மண் அகழ்வுக்கு இனிமேல் அனுமதி கொடுக்க வேண்டாம். இது இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் தீர்மானம். இந்த முடிவுக்கு ஏற்ப செயல்பட வேண்டும் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், இன்று (நேற்று) தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது என்பதற்காக இதற்கு முந்தைய திகதிக்கு முன்னர் அனுமதி கொடுக்கப்பட்டது போன்று திகதியிட்டும் அனுமதி கொடுக்கப்படக் கூடாது- என்றார். (எ-05)

# வவுனியாவில் விபத்து யாழ். இளைஞன் பலி!

வவுனியா, டிசெ.27

வவுனியா கோவில்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் சிக்கிய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞன் மற்றொரு இளைஞனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றார்.

கோவில்குளம் பகுதியில் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையில் இருந்த



மின்சார கம்பத்துடன் மோதி விபத்தில் சிக்கியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். மற்றையவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம், அராலி பகுதியைச் சேர்ந்த ப. சஞ்சயன் என்ற 22 வயது இளைஞனே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-10)

## சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு

# அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடும் அஞ்சலியும்

வவுனியா, டிசெ.27

வவுனியா - கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவாக விசேட வழிபாடும் அஞ்சலி நிகழ்வும் நேற்று நடைபெற்றது.




வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் அகிலாண்டேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா சபையும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது, சுனாமி அனர்த்தத்தின் போது, உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், இறந்தவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி நெய் தீபம் ஏற்றப்பட்டு மோட்ச வழிபாடும் நடைபெற்றது.

இதில் அந்தணச் சிவாச்சாரியார்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மோட்ச வழிபாட்டில் ஈடுபட்டனர். (எ-10)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்பு தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். தோற்றப்பொலிவுக் கூடும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். புதுபொருள் வந்து சேரும். பயணங்களால் பயனடைவீர்கள்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.


# சுனாமி நினைவுதினம் பூந்தோட்டத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

வவுனியா, டிசெ.27

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் சுனாமி பேரலையில் உயிர்நீத்தவர்களுக்கான 20ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு நேற்றுக்காலை நடைபெற்றது.

பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபியில் இந்த பிரார்த்தனை நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுத்தூபிக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-10)



# தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் வவுனியா மாணவன் வெள்ளிப் பதக்கம்

வவுனியா, டிசெ.27

தேசிய மட்ட இளையோருக்கான குத்துச்சண்டை போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் ரி. தரணிதரன் வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இளையோருக்கான இவ் குத்துச்சண்டை போட்டியானது

18, 19, 20 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெற்றது. இதன்போது, 69 - 71 கிலோ கிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட இம் மாணவன் இறுதிப் போட்டியில் கண்டி சென் சில்வஸ்ரார்ஸ் கல்லூரி மாணவனை எதிர்கொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார். (எ)




# பஸ் சாரதி, நடத்துநர்மீது தாக்குதல் ஒருவர் கைது, ஒருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்குள் புகுந்த இருவர் இ. போ. சவுக்கு சொந்தமான காரைநகர் சாலை பேருந்தின் சாரதி மற்றும் யாழ். சாலை நடத்துநர் மீது தாக்குதலை நடத்திவிட்டு தப்பியோடினர். இந்த நிலையில், தாக்குதல் நடத்திய ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், யாழ் - காரைநகர் ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனுடன் கலந்துரையாடினர்.


இவ்வாறான பின்னணியில் இந்தச் சம்பவம் குறித்து விரைந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு, அமைச்சர் பொலிஸாரிடம் தெரிவித்தார். அத்துடன் அவர் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் பணிப் பகிஷ்கரிப்பு நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் கைவிடப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் தாக்குதல் நடத்திய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மற்றையவர் தலைமறைவாகியுள்ளார். (எ- 05)

# காட்டு மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் இருவர் கைது

புதுக்குடியிருப்பு, டிசெ.27

அனுமதியின்றி காட்டுக்குள் புகுந்து பெறுமதி மிக்க 1500 இற்கும் மேற்பட்ட காட்டு காயா தடிகளை வெட்டிய குற்றச்சாட்டில் இருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



புதுக்குடியிருப்பு வள்ளிபுரத்தில் இருந்து பெறுமதிமிக்க காட்டு காயா தடிகளை வெட்டி, கப்ரக வாகனம் ஒன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்காக கடத்தப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக, வீதி சோதனையின் மூலம் கப்ரக வாகனமும் அதன் சாரதியம் மற்றும் ஒரு நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பெறுமதி மிக்க காயா தடிகளும் பொலிஸாரால் பறிமுதல்செய்யப்பட்டுள்ளதுடன், கைதான நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு 2025இல் சம்பள உயர்வு

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த

கொழும்பு, டிசெ.27

**ஆசிரியர்கள் உட்பட அரச துறை ஊழியர்களுக்கு அடுத்த வருடத்திற்குள் உறுதியான சம்பள உயர்வு வழங்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளில் சம்பள அதிகரிப்பு தொடர்பான முழு விவரங்களும் உள்ளடக்கப்படும் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு நாங்கள் வேலை செய்கிறோம், அரசியல் இலாபத்துக்காக அல்ல, ஆனால் நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் மக்கள் கணிசமான இன்னல்களை எதிர்கொள்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். தற்போதுள்ள சம்பளம் போதுமானதாக இல்லை.

அத்துடன் சம்பள அதிகரிப்பு அவசர தேவை. நாம் அனைவரும் அறிந்தது போல், முன்னைய அரசாங்கத்தால் நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஒரு பொறுப்பான நிர்வாகம் என்ற வகையில், 2026 வரை மக்களைப் பொறுமையாக காத்திருக்க வேண்டும் என்று நாங்கள் கூற முடியாது. நாங்கள் அத்தகைய அணுகுமுறையை எடுக்கவில்லை.

எனவே, அடுத்த ஆண்டுக்குள் உறுதியான சம்பள உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும்-என்றார். (அ)

# நத்தார் களியாட்ட நிகழ்வில் தகராறு 3 பெண்கள் உட்பட எட்டு பேர் காயம்!

கொழும்பு, டிசெ. 27

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வொன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறில் 03 பெண்கள் உட்பட எட்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

அம்பலாங்கொடை, ஹெரியாவல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் நத்தார் பண்டிகையை முன்னிட்டு களியாட்ட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது, களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட நபர்கள் சிலர் அயல் வீட்டில் உள்ள நபர்களுடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு எல்லை மீறியதில் அயல் வீட்டில் உள்ள நபர்கள் சிலர் களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட நபர்களை இரும்புக் கம்பி மற்றும் பொல்லால் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர்கள் வேதர மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொலிஸார் இடமாற்றம் 6 மாதங்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 27

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற உத்தரவு தொடர்பில் இலங்கை பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு தொடர்பான பொலிஸ் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இது தொடர்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படவுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை அமுல்படுத்தும் திகதி 2025 ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், கடமைத் தேவைகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த உத்தரவு தடையாக இருக்காது என பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். (அ)

# பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு விரைந்து முற்றுப்புள்ளி!

## அமைச்சர் சரோஜா சாவித்ரி தலைமையில் தேசிய செயற்திட்டம் அங்குரார்ப்பணம்

கொழும்பு, டிசெ. 27

பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வரும் நோக்கிலான இரண்டாவது பல்துறைசார் தேசிய செயற்திட்டம் அண்மையில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் தலைமைத்துவத்தின்கீழ் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தேசிய செயற்திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் என்பன கடந்த மூன்று வருடகாலமாக அவசியமான தொழில்நுட்ப மற்றும் வழிகாட்டல் உதவிகளை வழங்கிவந்தன. அத்தோடு பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்வதை முன்னிறுத்திய இலங்கையின் கூட்டு செயற்திட்டத்துக்கு நோர்வே மற்றும் கனேடிய நாடுகளின் அரசாங்கங்கள் அவசியமான அனுசரணையினை வழங்கியிருந்தன.

அதன்படி பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் தயாரிக்கப்பட்ட முதலாவது தேசிய செயற்திட்டம் 2016 - 2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் இரண்டாவது செயற்திட்டம் 2024 - 2028ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்செயற்திட்டமானது பாலின மேம்பாடு, பொருளாதார மேம்பாடு, சமூகப்பாதுகாப்பு, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுகாதாரம், பெருந்தோட்டம், சிறுவர் விவகாரம், போக்குவரத்து, ஊடகம், இளைஞர் மற்றும் விளையாட்டு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கல்வி எனும் விடயப்பரப்புக்களுடன் தொடர்புடைய 13 அமைச்சுக்களின்கீழ் இயங்கும் 13 பிரதான துறைகளையும், 5 உப துறைகளையும் உள்ளடக்கியுள்ளன.

இச்செயற்திட்டமானது சம்பந்தப்பட்ட அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் உள்ளிட்ட ஐ.நா முகவரமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அபிவிருத்திப்பங்காளிகள், தனியார்துறையினர் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி, அதனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (அ)

# பண்டிகைக் காலங்களில் இணையவழி பண மோசடி

கொழும்பு, டிசெ. 27

பண்டிகைக் காலங்களில் இணையம் ஊடான பண மோசடிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சில பரிசுகளை வென்றதாகக் கூறி வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து பண மோசடி செய்ததாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த தெரிவித்தார்.

ஏ.ஜ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சில முறைகேடுகள் நடப்பதாக முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான அழைப்புகள் மற்றும் சம்பவங்களில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு பொதுமக்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# ஹிக்கடுவ கடலில் மூழ்கி இந்திய பிரஜை உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 2

ஹிக்கடுவ, தொடந்துவ பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

57 வயதான இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை தனது மகள், மகன் மற்றும் மற்றுமொரு நபருடன் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோதே மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, பிரதேசவாசிகள் அவரை கரைக்கு அழைத்து வந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஹிக்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொள்கை கட்டமைப்பு இன்மையால் ஆபரணத்துறை ஏற்றுமதியில் வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 27

இரத்தின கற்கள் மற்றும் பிரத்தியேக ஆபரணங்களை ஏற்றுமதி செய்வதன் ஊடாக எதிர்வரும் காலங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை ஈட்டுவதனை இலக்காக கொண்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அலுவல்கள் பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்தார்.

முறையான கொள்கைக் கட்டமைப்பு இல்லாத காரணத்தினால் இந்த துறை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான அந்நிய செலாவணியை ஈட்டுவதில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறை ஏற்றுமதி முக்கிய பங்கு வகிக்கின்றது.

முறையான கொள்கைக் கட்டமைப்பு இல்லாத காரணத்தினால் இந்த துறை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது.

அத்துடன் தொழிற்துறை போட்டித்தன்மையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் தற்போதைய அரசாங்கம் குறித்த தடைகளை அகற்றுவதில் கவனம் செலுத்துமென கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அலுவல்கள் பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் பொருளாதாரத் திட்டம் வென்றால் ரணிலுக்கே பெருமை!

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, டிசெ. 27

**பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்படும் திட்டங்கள் வெற்றி பெற்றால் அதன் பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். ரணிலின் பொருளாதார கொள்கையை கடுமையாக விமர்சித்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எவ்வித மாற்றமுமில்லாமல் அந்த பொருளாதாரக் கொள்கையை முழுமையாக செயற்படுத்துகிறார் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தின. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தீர்மானங்களை எடுத்தோம். இதற்கமைய மாறுபட்ட அரசியல் கொள்கையை கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கினோம். இருப்பினும் எமது ஆதரவை தவறான வகையில் பயன்படுத்த முயற்சித்த போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்தி தமது அரசியல் செல்வாக்கை பலப்படுத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக கடுமையாக செயற்பட்டதால் கட்சி என்ற ரீதியில் எமக்கான இருப்பை தக்கவைத்துக் கொண்டுள்ளோம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன. வெறுப்புக்களை முன்னிலைப்படுத்தியே ஆட்சிக்கு வந்தனர். ஆகவே வெறுப்பு அரசியல் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்காது. நாட்டு மக்கள் வெகுவிரைவில் உண்மையை விளங்கிக் கொள்வார்கள்.

பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்படும் திட்டங்கள் வெற்றி பெற்றால் அதன் பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சேர வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையை கடுமையாக விமர்சித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தற்போது முழுமையாக அமுல்படுத்தியுள்ளார்-என்றார். (அ)

# அதி உயர் டெங்கு வலயங்களாக 15 சுகாதார மருத்துவப் பிரிவுகள்

கொழும்பு, டிசெ. 27

நாட்டில் இனங்காணப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைத் தொடர்ந்து 15 சுகாதார மருத்துவ அதிகாரப் பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயமிக்க பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில்-இம்மாதம் 17 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 47 ஆயிரத்து 599 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த மாதம் சுமார் 3,178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்தோடு டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 23 ஆக உயர்வடைந்துள்ளது.

எதிர்வரும் தினங்களில் பதிவாகக்கூடிய டெங்கு நோயாளர்களின் வீதம் மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. கொழும்பு, கம்பஹா, கண்டி, யாழ்ப்பாணம், காலி, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காணக் கூடியதாக உள்ளது-என்று கூறியுள்ளது. (அ)

# காலி முகத்திடலில் திடீரென தீப்பிடித்து எரிந்தது ஓட்டோ!

கொழும்பு, டிசெ. 27


கொழும்பு - காலி முகத்திடலில் பயணித்து கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.



விபத்தின்போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 2024 இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2 மில்லியனை மிஞ்சியது!




கொழும்பு, டிசெ. 27

2024 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நேற்று இரண்டு மில்லியனைக் கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தாய்லாந்தை சேர்ந்த தம்பதியரே அந்த இலக்கை அடைந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

டிசெம்பர் முதல் பாதியில் மாத்திரம் மொத்தம் 97,115 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதாவது ஒரு நாளைக்கு சராசரியாக 6,474 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். (அ)

# பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அறிவுத்தலை புறந்தள்ளும் மின்சாரசபை

## மின்சார நுகர்வோர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 27

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் சலுகை விலை நிர்ணயம் குறித்த அறிவுறுத்தல்களை புறக்கணித்து, இலங்கை மின்சார சபையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து சில்லறை விலையில் எரிபொருளை வாங்குவதாக மின்சார நுகர்வோர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மின்சார நுகர்வோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவிக்கையில்-நாட்டின் மொத்த எரிபொருள் நுகர்வில் 20 முதல் 40 வீதத்தை இலங்கை மின்சார சபை பெற்றுக்கொள்வதாகக் கூறப்படுகின்றது.

அந்த எரிபொருளை குழாய்கள் வழியாக நேரடியாக பெற்றுக்கொள்வதாக கூறுகின்ற போதும், தள வாடகை, ஊழியர் கட்டணங்கள் போன்ற செலவுகள் உட்பட சில்லறை விலையை ஒத்த பெறுமதியிலேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை இலங்கை மின்சார சபை தொடர்ந்தும் பெற்றுக்கொள்கின்றது.

கடந்த ஆண்டு முதல், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபையை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் எரிபொருள் கொள்வனவுக்கான சலுகை விலை ஒப்பந்தத்தை எட்டுமாறு பலமுறை வலியுறுத்தியுள்ளது.

ஆனால், இதுவரை அத்தகைய ஒப்பந்தம் எட்டப்படவில்லை. இலங்கை மின்சார சபையானது அத்தகைய ஒப்பந்தத்தை அடைந்து, சலுகை விலையில் எரிபொருளை கொள்வனவு செய்தால் அதுவே மின்சார கட்டணத்தை சுமார் 20 வீதமாக குறைப்பதற்கு உதவும். அதன் மூலம், இலங்கை மின்சார சபையின் இலாப நிலையைக் கருத்தில் கொண்டு, மின்சார கட்டணங்களை 30-35 வீதமாக குறைப்பதற்கு வாய்ப்புள்ளது.

இலங்கை மின்சார சபை அவ்வாறு செய்யவில்லை. ஆகவே குறித்த இணக்கப்பாட்டை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்-என்றார்.

# கோட்டா காலத்து சீன உரம் புதிய விசாரணை விரைவில்

கொழும்பு, டிசெ. 2

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் மற்றும் இயற்கை விவசாயத்தை அறிமுகப்படுத்துவதிலும் நடைபெற்ற மோசடிகள் குறித்து அரசாங்கம் புதிய விசாரணையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக பிரதி விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இவ்வாறான நிலையில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதாக கூறி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக கடந்த ஆட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளோம். அந்த விசாரணைகளை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது சம்பந்தமாக ஆராய்ந்து வருகின்றோம்.

தேசிய கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில், சீனாவிலிருந்து இறக்குமதி செயப்பட்ட உரத்துக்கான பரிவர்த்தனையில் விவசாய அமைச்சும், விவசாய இராஜாங்க அமைச்சும், கொழும்பு வணிக உரங்கள் லிமிடெ[illegible] மற்றும் சிலோன் உர நிறுவனம் ஆகியன தமது கடமையைச் சரியாக ஆற்றவில்லை என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டில் தோல்வியடைந்த இயற்கை விவசாயத் திட்டத்திற்கு அப்போதைய அரசாங்கம் மிகப்பெரிய தொகையைச் செலவிட்டுள்ளது. அந்த அரசாங்கம் குறித்த திட்டத்துக்காக 60 பில்லியனை ரூபாவை செலவிட்டதாகக் கூறப்படுகிறது. நாங்கள் அதையும் விசாரிக்கவுள்ளோம்-என்றார்.

# வனப்பகுதியில் கட்டுதுவக்கு வெடித்ததில் ஒருவர் மரணம்!

கொழும்பு, டிசெ. 27

மாத்தளை, நாவுல, அம்பகஹதெவொல வனப்பகுதியில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த கட்டுதுவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நாவுல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மாத்தளை, கொங்கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

இவர் நேற்று முன் தினம் அம்பகஹதெவொல வனப்பகுதிக்கு சென்றிருந்தபோது, விலங்குகளை வேட்டையாடுவதற்காக இனந்தெரியாத நபரொருவரால் வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் பலத்த காயமடைந்தார்.

இதனையடுத்து, காயமடைந்தவர் அம்பன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்காவை ஏற்ற தேசிய மக்கள் சக்தி மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 27

**எட்கா ஒப்பந்தத்துக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட தேசிய மக்கள் சக்தி இன்று அதனை ஏற் றுக்கொண்டிருக்கிறது. எனவே கடந்த காலங்களில் மக்க ளிடம் பொய் கூறி அவர்களை ஏமாற்றியமைக்காக தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் மன்னிப்பு கோர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**



எட்கா ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளமை குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது இரு நாட்டு அரச தலைவர்களுக்கு மிடையில் பிரதான சில விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. எட்கா, மின்சக்தி மற்றும் வலுசக்தி துறை, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணி கள் குறித்து அவதானம் செலுத் தப்பட்டிருந்தது.

இவை இதற்கு முன்னரும் பல்வேறு அரசாங்கங்களால் அவதானம் செலுத்தப்பட்ட ஒரு காரணியாகும். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க அந்த பேச்சுவார்த்தை களுக்கு அப்பால் சென்று பதிலளித்துள்ளார். மகிந்த, மைத்திரி, கோட்டா மற்றும் ரணில் அரசாங்கங்களை விட தற்போதைய அரசாங்கம் விரைவாகச் செல்வதாகவே தோன்றுகிறது.

தேர்தலுக்கு முன்னர் எட்கா ஒப்பந்தத்துக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட பிரதான தரப்பு தேசிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகும். தற்போது இந்த அரசாங்கம் இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளது. ஆனால் மக்களிடம் அதனை மறைக்கின்றனர். எந்த வொரு நாட்டுடனும் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து மக்கள் நலன் சார்ந்த தீர்மானங் களை எடுப்பதானால் அதனை வெளிப்படை தன்மையுடன் முன்னெடுக்க வேண்டும்.

அதேபோன்று அன்று இவற்றை எதிர்த்து விட்டு, தற் போது சரியென ஏற்றுக் கொள் வார்களானால் அவர்கள் மக்க ளிடம் மன்னிப்பு கோர வேண் டும். அன்று மக்களை நாம் ஏமாற்றிவிட்டோம். ஆனால் இதுவே யதார்த்தம் என்பதை அரசாங்கம் நாட் டுக்கு கூற வேண்டும் -என்றார். (அ)

# ஹிக்கடுவையில் நீரில் மூழ்கிய நான்கு சுற்றுலா பயணிகள் மீட்பு

கொழும்பு, டிசெ. 27

நேற்று காலை 06.00 மணி யுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் ஹிக்க டுவையில் இடம்பெற்ற வெவ் வேறு நீரில் மூழ்கிய சம்பவங் களில் நான்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மீட்கப் பட்டதுடன் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

ஹிக்கடுவை கடற்பரப்பில் மூழ்கிய நான்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நேற்று முன் தினம் காலை மீட்கப்பட் டனர்.

அப்போது கடமையில் இருந்த பொலிஸ் உயிர்காக்கும் அதிகாரிகளால் சுற்றுலாப் பயணிகள் நால்வரும் காப்பாற் றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 33 மற் றும் 48 வயதுடைய ரஷ்யர்கள்.

இதேவேளை, ஹிக்கடுவ, தோடன்டுவ பிரதேச கடற்பரப் பில் நேற்று முன் தினம் மாலை இந்தியர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். (அ)

# முட்டை சார் உணவுகளின் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, டிசெ. 27

முட்டை விலை சடுதியாக குறைவடைந்தாலும் முட்டை ரொட்டி, முட்டை அப்பம் ஆகியவற்றின் விலை குறை யாமல் இருப்பது தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த நாட்களில் முட்டை ஒன்றின் விலை 58 ரூபாய் தொடக்கம் 60 ரூபாயாக காணப்பட்ட போது, முட்டை ரொட்டி மற்றும் முட்டை அப்பம் ஆகியவற்றின் விலை 130 தொடக்கம் 140 ரூபாயாக அதிகரித்தது.

தற்போது முட்டையின் விலை 30 முதல் 32 ரூபாய் வரை குறைந்துள்ளது.எனினும், முட்டை ரொட்டி மற்றும் முட்டை அப்பத்தின் விலை முன்பு போலவே உள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரி வித்து வருகின்றனர். (அ)

# உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தனித்தே போட்டியிடுவோம்!

கொழும்பு, டிசெ. 27

உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தலில் தனித்துப் போட்டியிடப்போவதாக பொதுஜனபெரமுன தெரிவித் துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தல் தொடர்பில் அக்கட்சியின் பொதுச்செய லாளர் சாகர காரியவசத்திடம் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் - உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து விசேட கவ னம் செலுத்தியுள்ளோம். சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடும் தரப்பினருடன் கூட்டணி அமைக்கப்போவ தில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் போது எம்மை விட்டுச் சென்ற வர்கள் இன்று அரசியலில் இருந்து காணாமல்போயுள் ளார்கள். அடுத்த தேர்தலில் எந்த தரப்பில் இருந்து போட்டியிடுவது என்பது அவர்களுக்கு கேள்விக்குறியாகி யுள்ளது.

ஆகவே உள்ளூராட்சி மன் றத் தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிடுவோம். கட்சிக்குள் இளையோர் உள்வாங்கப்பட் டுள்ளனர். நாம் கிராம மட்டத் திலிருந்து மீண்டும் கட்சியை கட்டியெழுப்பும் செயற்பாடு களை ஆரம்பித்துள்ளோம். பொதுஜன பெரமுன மீண்டும் எழுச்சி அடையும்.

உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தலை கையாள்வது தொடர்பில் விரைவில் கலந்து ரையாடல்களை மேற்கொள்ள வுள்ளோம். அரசாங்கம் புதிய வேட்புமனுக்களை கோருவதற் கான நடவடிக்கைகளை தாமத மின்றி முன்னெடுக்க வேண் டும்-என்றார். (அ)

# கச்சதீவு குறித்து இந்தியாவுடன் பேசவேண்டிய அவசியமில்லை

## சரத் வீரசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 27

இலங்கையின் தேசிய பாது காப்பின் பிரதான ஒரு அம்சமாக கச்சதீவு காணப்படுகிறது. கச்சதீவு இலங்கைக்கு சொந்த மானது. இவ்விடயத்தில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை யில் ஈடுபடுவது அவசியமற் றது. இந்தியாவின் ஒத்துழைப் புக்களை பெற்றுக்கொள்வ தற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அடிபணிய வேண்டிய தேவை கிடையா தென முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வாக கச்சதீவை மீட்க வேண்டும் இந்தியாவின் திராவிட முன் னேற்றக் கழகம் தீர்மானம் ஒன்றை அண்மையில் நிறை வேற்றியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கச்சதீவு விவகாரத்தை இந்திய அரசாங் கம் அரசியல் பிரசாரத்துக்கா கவே பயன்படுத்திக் கொள் கிறது. இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் சென்று சட்ட விரோதமான முறையில் மீன்பிடி நடவடிக் கையில் ஈடுபடுவதில்லை. இந்திய மீனவர்கள் தான் இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் உள்நுழைந்து கடல் வளத்தை யும், மீன் வளத்தையும் நாசம் செய்கிறார்கள்.

இந்திய மீனவர்கள் இலங் கையின் கடல் பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இவ்விடயத் தில் இந்திய அரசாங்கம் மந்த கதியில் தான் செயற்படுகிறது.

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது. இவ்விடயம் குறித்து இந்தியாவுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடவேண்டிய அவசியம் கிடையாது. இலங்கை இவ்விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கவேண்டும். பேச்சுவார்த் தைக்கு இணக்கம் தெரிவிப்ப தும் பிற்காலத்தில் பல நிபந்த னைகளை ஏற்றுக் கொள்வதற்கு காரணியாக அமையும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவின் இந்திய விஜயம் பல விடயங்களை உணர்த்தி யுள்ளது.

அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்ற நிலை யில் அதன் அம்சங்களின் பிரதான ஒன்றாக கருதப்படும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இந்தியாவுக்கு வாக்குறுதியளித்துள்ளமை தவறானதொரு செயற்பாடா கும்-என்றார். (அ)

# மேலதிகமாக ரயில்கள் இயக்க முடியாத நிலை

கொழும்பு, டிசெ. 27

ரயில் சாரதிகள் மற்றும் காவலர்கள் பற்றாக்குறையால் பண்டிகைக் காலத்துக்கு தேவையான கூடுதல் ரயில் களை இயக்க முடியாத நிலைமை காணப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக இந்தப் பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு எதிர்பார்ப்ப தாகவும் ரயில்வே திணைக் களம் அறிவித்துள்ளது.

இது குறித்து ரயில்வே திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும், போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொதுமுகா மையாளருமான எம்.ஜே.இந்தி போலேஜ் தெரிவிக்கையில்-

பண்டிகைக் காலத்தில் கடந்த ஆண்டுகளில் 20 இற்கும் மேற்பட்ட ரயில்கள் இயக்கப் படும் நிலைமை இருந்தாலும் தற்போது அந்த நிலைமை யுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டி கைக்கு இரண்டு கூடுதல் ரயில் களை மட்டுமே இயக்கக்கூடிய நிலைமையே உள்ளது.

ரயில் சாரதிகள் மற்றும் காவலர்கள் உள்ளிட்ட ஊழி யர்கள் பற்றாக்குறை இருப்ப தால் இந்த ஆண்டு போதுமான ரயில்களை இயக்க முடியாது போயுள்ளது-என்றார். (அ)

# எரிந்த வாகனத்துக்குள் நபரொருவரின் சடலம்!

கொழும்பு, டிசெ. 27

ஹபரணை பொலனறுவை பிரதான வீதியில் ஹத்தே கன்வானுக்கும் படுஓயாவுக்கும் இடையில் 38 ஆவது கிலோ மீற்றர் தூணுக்கு அருகில் நேற்று முன் தினம் இரவு கப் வாகனமொன்றில் எரிந்த நிலையில் நபரொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள் ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை மின்னேரிய வீதியில் பயணித்த நபர் ஒருவர் கப் வாகனமொன்று தீப்பிடித்து எரிவதாக மின்னேரிய பொலிஸ ாருக்கு அறிவித்ததையடுத்து மின்னேரிய பொலிஸார் எரிந்து கொண்டிருந்த வாகனத்தை மீட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் தீ பரவியதாகவும், அப்போது கப் வாகனம் ஹபரணை நோக்கி நிறுத்தப்பட்டதாகவும், அதில் வேறு யாரும் இருக்க வில்லை என்றும் மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

நபர் ஒருவரைக் கொன்று அவரது சடலத்தை வண்டியில் ஏற்றி, கப் வாகனத்தை இந்த பகுதிக்கு கொண்டு வந்து தீ வைத்து எரித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேத்தாழை துறைமுகப் பகுதியில் சட்டவிரோதமாக காணி அபகரிப்பு

## பொலிஸார் வீண்பழி சுமத்துவதாக மீனவர்கள் கவலை

மட்டக்களப்பு, டிசெ.27

**மட்டக்களப்பு, வாழைச்சேனை பேத்தாழை துறைமுகப் பகுதியில் சட்டவிரோதமாக காணி அபகரிப்பு தொடர்ந்து வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் பிரதேச மீனவ அமைப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து உண்மை நிலைமைகளை ஆராய அவர் அங்கு சென்றிருந்தார்.

துறைமுகப் பகுதியின் அருகாமையில் உள்ள ஆற்றோர அரச காணி ஒன்றை மீனவர்கள் தங்களது நாளாந்த போக்குவரத்து மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் படகு நிறுத்தும் செயல்பாட்டுக்கு பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில் அவர்களின் நாளாந்த செயல்பாடுகளுக்கு இடையூறாக அப் பிரதேச அரசியல் வாதி ஒருவரின் சகோதரர்களில் ஒருவர் ஆற்றோடு சேர்த்து வேலிக் கட்டைகள் இட்டு அடைத்துள்ளதாகவும் அடைக்கப்பட்ட கட்டைகளை அகற்றி தருமாறும் மீனவ அமைப்பினர் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அங்கு சென்ற சாணக்கியன் எம். பி., ஆற்றங்கரையோடு உள்ள காணிகளின் குறிப்பிட்டளவு பிரதேசம் அரசுக்கு சொந்தமானதாகவும் அவற்றைத் தனியார் அபகரிக்க முடியாது. ஆனால், அதனை பராமரிக்கலாம். வேலி இடவோ, மதில் கட்டவோ முடியாது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக மீனவ அமைப்பு பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இவ்வாறு கலந்துரையாடல் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை அரசியல்வாதியின் சகோதரரின் ஆதரவாளர்களுக்கும் மீனவர்கள் சிலருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

காணி பிணக்கு தொடர்பில் கரையோரம் பேணல் திணைக்களத்துக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து அவர்கள் கடந்த வாரம் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை அவதானித்ததன் பின்னர் அடைக்கப்பட்ட கட்டைகள் சிலவற்றை அகற்ற வேண்டும் என தங்களிடம் தெரிவித்ததாக மினவ அமைப்பினர் கூறினர்.

இதேவேளை, தங்களது காணியின் கட்டைகள் சிலவற்றை மீனவர்கள் சிலர் இரவோடு இரவாக அகற்றியதாக குற்றம் சுமத்தி அவர்களுக்கு எதிராக முறைப்பாட்டினை கல்குடா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து, தாம் செய்யாத குற்றச் செயலை செய்தாக தங்கள் மீது வீண்பழி சுமத்துவதாக மீனவர்கள் கவலை வெளியிட்டனர். (எ)

# கட்டுரை போட்டியில் 2 மாணவிகள் வெற்றி



மட்டக்களப்பு, டிசெ.27

2024 தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலக மத்தியஸ்த பிரிவால் நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் கனிஷ்ட பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவில் துறைநீலாவணை மகா வித்தியாலய மாணவிகள் முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டனர்.

இதில் கனிஷ்ட பிரிவில் முதலாவது இடத்தை சுபராஜ் கிருஸ்டிகாவும் சிரேஷ்ட பிரிவில் இரண்டாவது இடத்தை ற.ஹஸ்தனியும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான சான்றிதழை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன், 34 ஆவது மத்தியஸ்த தின நிகழ்வில் வைத்து வழங்கினார்.(எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவரிடம் விசாரணை

கல்முனை, டிசெ. 27

ஐஸ் போதைப்பொருட்களை பொதி செய்து விநியோகித்த சந்தேகநபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கல்முனைக்குடி 02 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர், சான்றுப் பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப் பட்டார். (எ)

# சுனாமி நினைவு தின நிகழ்வு



கல்முனை, டிசெ.27

சுனாமியில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து கல்முனை ஆதார மருத்துவமனையில் சுனாமி நினைவு தின வைபவம் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருத்துவமனை ஊழியர்கள் கலந்து கொண்டனர். (எ)

# மருத்துவமனை தேவைகள் குறித்து அஷ்ரப் தாஹிர் எம். பி. ஆராய்வு

சம்மாந்துறை, டிசெ. 27

சம்மாந்துறை ஆதார மருத்துவமனைக்கு பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் சென்றிருந்தார்.

இதன்போது, மருத்துவமனையின் தேவைகள் குறித்தும், அரச ஒசுசலவை சம்மாந்துறை பிரதேசத்தில் திறப்பது சம்பந்தமாகவும் வைத்திய அத்தியட்சகர் டி. பிரபாசங்கருடன் விரிவாக கலந்துரையாடினார்.இதன்போது, முன்னாள் பிரதேச சபை தவிசாளர் ஐ. எல். எம். மாஹிர்,மருத்துவமனை உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ)



# திருக்கோவில் மக்களுக்கு நுளம்பு வலை விநியோகம்

திருக்கோவில், டிசெ.27

திருக்கோவில் பிரதேசத்தில் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு அனைத்துலகத் தமிழர் பேரவை 150 நுளம்பு வலைகளை விநியோகம் செய்துள்ளது.

இந்த நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்துலகத் தமிழர் பேரவையின் நிதிப் பங்களிப்புடன் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் மற்றும் இளவாலை, வருத்தப்படாத வாலிபர் சங்கம் விருட்சம் உதவும் உள்ளங்கள் அமைப்பினரால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.(எ)



# வெல்லாவெளியில் யானை உயிரிழப்பு

## வனஜீவராசிகள் திணைக்களம் விசாரணை

மட்டக்களப்பு, டிசெ.27

மட்டக்களப்பு, போரதீவு பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டதும், வெல்லாவெளி வனஜீவராசிகள் திணைக்கள பிரிவுக்குரிய திக்கோடையில் உள்ள வாய்க்கால் ஒன்றினுள் சுமார் 20 - 25 வயது மதிக்கதக்க யானை ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்படுகிறது.

வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மேலும், முறையான பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாமையால் யானை - மனித மோதலில் இரு தரப்பிலும் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் வெல்லாவெளியில் யானை உயிரிழந்தமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை வன ஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பை அடுத்து

# மொசாம்பிக்கில் பெரும் வன்முறை

## இதுவரை 21 பேர் உயிரிழப்பு

மாபுரோ, டிசெ.27

**மொசாம்பிக்கில் சர்ச்சைக்குரிய ஜனாதிபதித் தேர்தல் முடிவு தொடர்பான நீதிமன்ற தீர்ப்பை அடுத்து ஏற்பட்ட பெரும் வன்முறையால் இதுவரை 21 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.**

ஆளும்கட்சி வேட்பாளர் டேனியல் சாப்போவின் வெற்றியை அரசியலமைப்பு பேரவை உறுதிப்படுத்தியதை அடுத்து மொசாம்பிக்கின் முக்கிய நகரங்களில் வன்முறை வெடித்தது. இந்த வன்முறையில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.

நாடு முழுவதும் இதுவரை 236 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 21 பேர் உயிரிழந்தனர். 13 பொது மக்கள் மற்றும் 12 பொலிஸார் காயமடைந்தனர்.

இரண்டு பொலிஸ் வாகனங்கள் உட்பட 25 வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, அதேவேளை, 11 பொலிஸ் துணைப்பிரிவுகளும் சிறைச் சாலையும் தாக்கப்பட்டு சேதப் படுத்தப்பட்டதோடு 86 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

பல்வேறு சமூக ஊடகத் தளங்களில் பரவும் காட்சிகள், தலைநகர் மாபுரோ மற்றும் பெய்ரா நகரத்தில் போராட்டக்காரர்கள் கடைகளை எரித்து சூறையாடியதைக் காட்டியது, அங்கு சில நகர அதிகாரிகள் நகரத்தை விட்டு வெளியேறியதாகக் கூறப்படுகிறது.

தேர்தல்களைக் கண்காணிக்கும் மொசாம்பிகன் சிவில் சமூகக் குழு, ஒக்ரோபர் 21 ஆம் திகதி முதல் போராட்டங்களில் 150இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அறிவித்தது.

இவர்களில், 34 பேர் டிசெம்பர் 4 மற்றும் 10 ஆம் ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் கொல்லப்பட்டனர்.

எதிர்ப்பு போராட்டங்கள் குறைவதற் கான அறிகுறிகளைக் காணவில்லை என்றும் அந்தக் குழு தெரிவித்தது.


இதேவேளை, மனித உரிமைகள் குழுக்கள் மொசாம்பிக் அதிகாரிகளை விமர்சித்துள்ளன, அவை தேர்தலுக்கு எதிராக அமைதியான முறையில் தொடங்கிய எதிர்ப்புகளுக்கு எதிரான மிருகத்தனமான ஒடுக்குமுறை என்று விவரிக்கின்றன. எதிர்க்கட்சிகள் இது மோசடி என்று கூறுகின்றன.

சர்வதேச கண்காணிப்பாளர்களும் வாக்கெடுப்பில் முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரிவித்துள் ளனர்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, நாட்டில் தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. (ஏ)

# விமான விபத்தில் 35 பேர் உயிரிழப்பு

## கஜகஸ்தானில் பெரும் சோகம்



அக்டா, டிசெ.27

அசர்பைஜான் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் கஜகஸ்தானின் அக்டா நகரில் விபத்துக்குள்ளானதில் 35 பேர் உயிரிழந்தனர். 11 வயது சிறுவன் உட்பட 32 பேர் காயங்களுடன் தப்பினர்.

அசர்பைஜான் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் எம்பரர்-190 ரக விமானம் 67 பேருடன், அசர்பைஜான் தலைநகர் பாகுவில் இருந்து ரஷ்யாவின் செசன்யாவில் உள்ள க்ரோஸ்னி நகருக்கு சென்றது. அங்கு கடும் பனி மூட்டம் இருந்ததால், விமானம் கஜகஸ்தானின் அக்டா நகருக்கு திருப்பிவிடப்பட்டது.

அக்டா விமான நிலையத்தை நெருங்கியபோது, பறவை கூட்டம் விமானத்தில் மோதியது. விமானத்தின் திசையை மாற்றுவதிலும் சிக்கல் ஏற்பட்டது. இதனால், விமானத்தை அவசரமாக தரையிறக்க விமானி வேண்டுகோள் விடுத்தார். விமான நிலையத்தை சுற்றி பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென கீழே இறங்கியது. விமானத்தை மேலே எழுப்ப விமானி முயன்றார். ஆனால், கட்டுப்பாட்டை இழந்த விமானம் தாறுமாறாக பறக்கத் தொடங்கியது.

விமான நிலையத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காஸ்பியன் கடற்கரையில் உள்ள நிலப் பகுதியில் வலதுபக்கம் சாய்ந்த நிலையில் தரையிறங்கி மோதியது. இதில் விமானம் தீப்பற்றி எரிந்தது. விமானத்தின் அவசரகால கதவு வழியாக சில பயணிகள் வெளியேறினர்.

இந்த விபத்தில், விமானத்தில் பயணம் செய்த 35 பேர் உயிரிழந்தனர், 11 வயது சிறுவன் உட்பட 32 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தனர். இவர்களில் 5 பேர் மட்டும் பலத்த காயமடைந்தனர். (ஏ)

# தேசிய பறவையாக கழுகு

வாஷிங்டன், டிசெ.27

அமெரிக்காவின் தேசிய பறவையாக வழுக்கை கழுகு அறிவிக்கப்பட்டுள்ளது.

வழுக்கை கழுகு வட அமெரிக்காவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தலைப்பகுதியில் வெள்ளை நிறம் கொண்டுள்ள இந்தக் கழுகு அமெரிக்காவில் சக்தி மற்றும் வலிமையின் அடையாளமாக கருதப்படுகிறது. அமெரிக்க வரலாற்றுடன் வழுக்கை கழுகுகளுக்கு 240 ஆண்டுகளுக்கு மேல் தொடர்புள்ளது.

இதையடுத்து, வழுக்கை கழுகை அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்து வந்தது.




இந்த நிலையில், வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒப்புதல் வழங்கியுள்ளார். இதன் மூலம் வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டல்

புதுடில்லி, டிசெ.27

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் கஜுராஹோவில் கென் - பெட்வா நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இரு நதிகளில் இருந்தும் எடுத்து வரப்பட்ட நீரை இணைப்புத் திட்டத்தின் மாதிரி வடிவம் மீது ஊற்றினார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்தநாளை முன்னிட்டு நினைவு அஞ்சல்தலை நாணயத்தை வெளியிட்ட பிரதமர் மோடி 44, 605 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட வுள்ள கென் - பெட்வா



நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்(ஏ)

# பாகிஸ்தான் தாக்குதல் ஆப்கானில் 46 பேர் பலி

## இருநாடுகள் இடையே பதற்றமான சூழ்நிலை

காபுல், டிசெ.27

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் இதுவரை 46 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனிடையே, ஆப்கானிஸ்தானில் பல்வேறு கிளர்ச்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானி தலிபான் என்ற கிளர்ச்சி அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு தங்கள் நாட்டின் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்துவதாகவும், இது பயங்கரவாத அமைப்பு என்றும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது. மேலும், இந்த அமைப்பை குறிவைத்து அவ்வப்போது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ள ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 46 பேர் உயிரிழந்தனர். ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்து பாகிஸ்தான் விமானப் படை தாக்குதல் நடத்தியதால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (ஏ)

# காஸாவில் தாக்குதல் 20 பேர் உயிரிழந்தனர்

கெய்ரோ, டிசெ.27

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், 51 பேர் காயமடைந்ததாகவும் காஸாவின் சுகாதார அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் படைகள், காஸா பகுதியில் நடத்திய தொடர் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர் மற்றும் காயமடைந்த 51 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளது. (ஏ)

# "அம்பேத்கருக்கு உரிய பெருமையை காங்கிரஸ் கட்சி கொடுக்கவில்லை"

புதுடில்லி, டிசெ.27

நாட்டின் நீர் பாதுகாப்புக்கு வழிகாட்டிய அம்பேத்கருக்கு உரிய பெருமையை காங்கிரஸ் கட்சி கொடுக்கவில்லை என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியாவின் நீர் பாதுகாப்பு முயற்சிகளுக்கு அம்பேத்கர் வழிகாட்டினார். ஆனால், இந்த நீர் பாதுகாப்பு முயற்சிக்கு வழிகாட்டிய அம்பேத்கருக்கு காங்கிரஸ் கட்சி உரிய பெருமையைக் கொடுக்கவில்லை.

எங்கு நல்லாட்சி நடக்கிறதோ அங்கு தற்கால சவால்களுக்கும் எதிர்காலத்துக்கும் கவனம் செலுத்தப் படுகின்றன.


துரதிருஷ்டவசமாக காங்கிரஸ், நீண்டகாலமாக நாட்டை ஆண்டது. ஆட்சியை அவர்கள் தங்களின் பிறப்புரிமையாக நம்பினர்.

ஆனால், அவர்கள் உண்மையாக ஆட்சி நடத்தவில்லை. காங்கிரஸ் இருக்கும் இடத்தில் மக்களாட்சி நடக்காது- என்றார்.

மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா சிறப்பான ஆட்டம் முதல் நாளில் 311 ஓட்டங்கள் குவிப்பு




மெல்பேர்ண், டிசெ.27

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான நாலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி நேற்று முதல் நாளில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் குவித்துள்ளது,

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி "பார்டர்-கவாஸ்கர்" கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பெர்த்தில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அடிலெய்டில் நடந்த 2ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியா 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது. பிரிஸ்பேனில் நடந்த 3ஆவது டெஸ்ட் சமனிலையானது.

இந்த நிலையில் இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ணில் நேற்றுத் தொடங்கியது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். அவுஸ்திரேலிய அணியில் 2 மாற்றங்களாக சாம் கான்ஸ்டாஸ் மற்றும் ஸ்காட் போலந்து அணியில் இடம்பெற்றனர்.

இந்திய அணியில் கில்லுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர் விளையாடும் வாய்ப்பை பெற்றார்.

முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக உஸ்மான் கவாஜா மற்றும் அறிமுக வீரர் சாம் கான்ஸ்டாஸ் களமிறங்கினர். அனுபவ வீரரான கவாஜா நிதானமாக விளையாட கான்ஸ்டாஸ் அதிரடியாக விளையாடினார். இந்தத் தொடரில் இதுவரை அவுஸ்திரேலிய வீரர்களைத் தடுமாற வைத்த பும்ராவின் பந்துவீச்சை திறம்பட சமாளித்து ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார்.

பும்ராவின் பந்துவீச்சில் 2 சிக்ஸர்கள் பறக்கவிட்ட அவர் 65 பந்துகளில் 60 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஜடேஜாவின் சுழலில் சிக்கினார். இதனையடுத்து களமிறங்கிய வீரர்களும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த அவுஸ்திரேலியா வலுவான நிலையை நோக்கி பயணித்தது.

உஸ்மான் கவாஜா 57 ஓட்டங்களிலும், லபுஸ்சான் 72 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். உணவு இடைவேளைக்கு பின்பு பந்துவீச்சில் சிறிது ஆக்ரோஷம் காட்டிய இந்தியா விக்கெட்களை விரைவாக வீழ்த்தியது. முந்தைய போட்டியின் ஹீரோ ட்ராவிஸ் ஹெட் இந்த முறை முதல் பந்தில் ஆட்டமிழந்தார்.

மிட்செல் மார்ஷ் 4 ஓட்டங்களிலும், அலெக்ஸ் ஹெரி தனது பங்குக்கு 31 ஓட்டங்கள் அடித்த நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

ஒருமுனையில் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் ஸ்டீவ் சுமித் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவுஸ்திரேலியா தரப்பில் நான்கு வீரர்கள் அரைச்சதம் அடித்து அசத்தினர்.

இந்த நிலையில், முதல் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா 86 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் குவித்துள்ளது.

ஸ்டீவ் சுமித் 68 ஓட்டங்களுடனும், பட் கம்மின்ஸ் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் பும்ரா 3 விக்கெட் கள் வீழ்த்தியுள்ளார். இன்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

(எ)

# 19 வயதில் களமிறங்கி கலக்கல் சாதனை படைத்த கான்ஸ்டாஸ்



மெல்பேர்ண்,டிசெ. 27

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ண தொடரின் 4ஆவது போட்டி நேற்றுத் தொடங்கியது.


இதில் அவுஸ்திரேலியா சார்பில் 19 வயதில் அறிமுக வீரராக களமிறங்கிய சாம் கான்ஸ்டாஸ், நடப்பு தொடரில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த பும்ராவின் பந்துவீச்சை எளிதாக எதிர்கொண்டார். அவரது பந்துவீச்சில் 2 சிக்ஸர்கள் விளாசிய கான்ஸ்டாஸ் 60 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த வயதில் அரைச்சதம் அடித்த 2ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற மாபெரும் சாதனையை கான்ஸ்டாஸ் படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,1. இயன் கிரெய்க் - 17 வயது 240 நாட்கள்,2. சாம் கான்ஸ்டாஸ் - 19 வயது 85 நாட்கள்,3. நீல் ஹார்வி - 19 வயது 121 நாட்கள், 4. ஆர்ச்சி ஜாக்சன் - 19 வயது 150 நாட்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# அஸ்வின் சாதனையை சமன் செய்தார் பும்ரா



மும்பை, டிசெ.27

இந்திய பந்து வீச்சாளர்களில் அதிக தரவரிசை புள்ளியை பெற்றவரான ரவிச்சந்திரன் அஸ்வினின் வாழ்நாள் சாதனையை ஜஸ்பிரீத் பும்ரா சமன் செய்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளுக்கான வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) வெளியிட்டது. இதில் துடுப்பாட்ட தரவரிசையில் முதல் 3 இடங்களில் ஜோ ரூட், ஹாரி புரூக் மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோர் மாற்றமின்றி தொடர்கின்றனர். ட்ராவிஸ் ஹெட் ஓர் இடம் முன்னேறி 4ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இதனால் 4ஆவது இடத்தில் இருந்த இந்திய வீரர் ஜெய்ஸ்வால் 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். மேலும், ஸ்டீவ் சுமித் மீண்டும் 10ஆவது இடத்துக்கு வந்துள்ளார். இந்திய வீரர்களில் ஜெய்ஸ்வால் தவிர வேறு யாரும் முதல் பந்து இடங்களுக்குள் இல்லை.

இந்த நிலையில், டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இந்திய வீரர் பும்ரா 904 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். இதன் மூலம் இந்திய பந்து வீச்சாளர்களில் அதிக தரவரிசை புள்ளியை பெற்றவரான அஸ்வினின் வாழ்நாள் சாதனையை சமன் செய்துள்ளார். இதற்கு முன்னர் அஸ்வின் 2016ஆம் ஆண்டு டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் 904 புள்ளிகள் பெற்றிருந்தார்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் மற்றொரு இந்திய வீரரான ரவீந்திர ஜடேஜா 6இல் இருந்து 10ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார்.

(எ)

காான்ஸ்டாஸ் உடன் மோதல்

# விராட் கோலி மீது தவறு இருந்தால் ஐ. சி. சி. வழங்கும் தண்டனை என்ன?

மெல்பேர்ண், டிசெ.27

விராட் கோலி - கான்ஸ்டாஸ் மோதல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது.

முன்னதாக இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியில் அறிமுகமான சாம் கான்ஸ்டாஸ் தொடக்க வீரராக களமிறங்கினார். அந்த வாய்ப்பில் சிறப்பாக விளையாடிய அவர் 60 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனிடையே அவர் துடுப்பாட்டம் செய்தபோது 10ஆவது ஓவரின் முடிவில் பந்தை கையில் எடுத்துக் கொண்டு ஓவர் மாற்றுவதற்காக விராட் கோலி நடந்து சென்றார். அதே பாதையில் எதிர்புறம் கான்ஸ்டாஸ் நடந்து வந்தார். அப்போது இருவரும் தங்களுடைய தோளில் நேருக்கு நேராக கொஞ்சம் பலமாக இடித்துக் கொண்டனர். இதனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனடியாக அருகில் இருந்த உஸ்மான் கவாஜா மற்றும் நடுவர்கள் முறுகல் நிலையை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

ஆனால், அந்த இடத்தில் விராட் கோலிதான் வேண்டுமென்றே கான்ஸ்டாஸ் மீது மோதியதாக நேரலையில் ரிக்கி பொண்டிங் மற்றும் மைக்கேல் வாகன் போன்ற முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர். அந்த தருணத்தை மீண்டும் பார்க்கும்போது விராட் கோலி தான் கோன்ஸ்டஸ் மீது மோதியதுபோல் தெரிகிறது.





இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஒருவேளை விராட் கோலி மீது தவறு இருந்து அவர் ஐ. சி. சியின் முதலாம் விதிமுறையை மீறியதாக இருந்தால் அபராதம் மட்டும் விதிக்கப்படும்.

ஒருவேளை இரண்டாம் விதிமுறையை மீறியதற்காக 4 கறுப்பு புள்ளிகளை பெற்றால் இந்தத் தொடரின் 5ஆவது போட்டியில் விராட் கோலி விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

(எ)

# சிம்பாவே டெஸ்ட் தொடர்; ரஷித் கான் திடீர் விலகல்



புலவாயோ, டிசெ.27

சிம்பாவே அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் ஆப்கானிஸ்தான் அணியிலிருந்து நட்சத்திர வீரர் ரஷித் கான் திடீரென விலகியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற் றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி புலவா யோவில் நேற்றுத் தொடங்கியது. இதில் முதலில் துடுப் பெடுத்தாடி வரும் சிம் பாவே அணி ஒரு விக் கெட் இழப் புக்கு 70 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இந்தப் போட்டியிலிருந்து ரஷித் கான் விலகி யுள்ளார். சமூக சேவை நிகழ்ச் சியில் அவர் கலந்துகொள்வதால் இந்தப் போட்டியில் அவர் பங்கேற் கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் மூன்று...

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இந்நிலையில் குழந்தைகளுக்கு சுவாசப் பிரச்னை ஏற்பட்டவேளை மேலதிக சிகிச்சைக்காக குழந்தை நேற்று முன் தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இருதய செயலிழப்பு காரணமாக குழந்தை உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ)

## ஒருங்கிணைப்பு...

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன், தம்பிராசா ஆகியோருக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள தம்பிராசாவுக்கு யார் அனுமதி வழங்கியது? எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது? கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்துபவர்களை ஏன் உள்ளே விடுகின்றீர்கள்?, தம்பிராசாவை வெளியே அகற்றுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் கூறினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் சந்திரசேகர், இனிமேல் பொதுமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லை என தெரிவித்தார். (அ )

## 13ஆவது...

பதிலளித்தே கஜேந்திரகுமார் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மாகாண சபை முறையையோ அல்லது 13 வது திருத்தத்தையோ இல்லாமல் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள் இது வரையில் நம்பிக்கை வைத்திருக்கக் கூடும். ஆனால், அண்மையில் இந்தி யாவுக்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்ற ஜனாதிபதி அநுரா குமார திஸ நாயக்கவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பிறகு அவருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 13 வது திருத்தத்தை பற்றி எதையுமே கூறு வதை தவிர்த்தார். இதன் மூலமாக கூறப்பட்ட செய்தியை தமிழ்க்கட்சிகள் விளங்கிக் கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை என்றும் அந்த பத்திரிகை யாளர் தனது பதிவில் குறிப்பிட்டி ருந்தார்.

கஜேந்திரகுமார் தனது பதிவில் மேலும் கூறியிருப்பதாவது -

தமிழ் மக்களின் சார்பிலேயே இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திட்டது என்பது முக்கியமாக கவனிக்கப்படவேண்டியதாகும். சமாதான உடன்படிக்கையில் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் வரை தமிழ் மக்கள் சார்பில் தலையீடு செய்வதற்கான கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு என்று நான் நினைக்கிறேன்.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் சமாதான உடனபடிக்கை பொருத்தமற்றது என்று இந்தியாவே உணருமானால், அது முற்றுமுழுதாக வேறு விடயம். நாங்கள் விரைவாக சிறந்த ஒரு தெரிவை கண்டறிய முடியும்.

ஒற்றையாட்சி அரசின் கீழ் எந்த அதிகாரப் பரவலாக்கமும் சாத்தியமில்லை என்று நீதிமன்றங்கள் திரும் பத்திரும்ப கூறியிருக்கும்போது 13 ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத் தல் எவ்வாறு நடக்கமுடியும் ? அதனால் 13 ஆவது திருத்தம் இனப்பிரச்னைக் கான அரசியல் தீர்வின் தொடக்கப் புள்ளியாகக் கூட ஒருபோதும் இருக்க முடியாது - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## உங்கள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முப்படையினரின் வசம் உள்ள காணிகளை மக்களுக்காக விடுவிப்பதற்கு படைகளின் ஆளணித்துவத்தை குறைக்கவேண்டும்.

வடக்கு மக்களுக்கு நாங்கள் தெரிவிப்பதாவது, உங்களுடைய சொந்த காணிக்குள் இராணுவ படைமுகாம் இருக்குமாயின் எமக்கு தகவல் தாருங்கள்.

இது தொடர்பிலான முழுமையான தகவல்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். மேலும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் காணி அமைச்சரை சந்திப்பதற்கான நடவடிக்கைகளை காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது, உரிய தரவுகள் இருக்குமாயின் எமக்கு காணி பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பில் கலந்துரையாடுவோம் - என்றார். (அ-05)

## மன்மோகன்...

சமீப காலமாகவே உடல்நலக்குறைவு காரணமாக, மன்மோகன் சிங் அரசியலிலிருந்து ஒதுங்கி இருந்தார்.

2024ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து உடல்நிலை அடிக்கடி சரியில்லாமல் போனது.

ஏப்ரல் 2024 இல் ராஜ்யசபா உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

மன்மோகன் சிங் 2004 முதல் 2014 வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார்.

தொடர்ந்து இரண்டு முறை பிரதமராகப் பணியாற்றி மன்மோகன் சிங், அதற்கு முன்பு 1991ஆம் ஆண்டு பிவி நரசிம்ம ராவ் அரசில் நிதி அமைச்சராகப் இருந்தார்.

அப்போது அவருடைய செயல்பாடுகள் காரணமாக இந்தியாவின் பொருளாதாரத்தின் சிற்பிகளில் ஒருவராகப் போற்றப்படுகிறார். (அ)

## கிளிநொச்சி...

'சட் அப்' என்று எல்லாம் கூற முடியாது. இங்கே அதிகாரிகள் தான் உள்ளார்கள்" - என்றார். இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, தம்பிராசாவை பார்த்து "கான் யூ சட் அப்" (உங்களது வாயை மூட முடியுமா?) என்றார்.

அத்துடன் சகாதேவனை பார்த்து "உங்களுடன் திருப்பி கதைத்ததற்காக ஒரு நாளில் 8 அல்லது 10 பேரை இடமாற்றம் செய்துள்ளீர்கள். இதனை உங்களது கட்சியோடு வைத்துக் கொள்ளுங்கள்" - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட "தம்பிராசா, ஓர் அரச அதிகாரியை பொது வெளியில் வைத்து அவமானப்படுத்தக் கூடாது. இடமாற்றம் பெற்றவர்கள் வேண்டும் என்றால் அமைச்சுக்கு முறையிடலாம்" - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா "நீங்கள் எந்தக் கட்சி? உங்களுக்கு கிடைக்கவில்லை தானே நொமினேசன். ஆகையால் அடுத்த முறை முயற்சியுங்கள். தயவு செய்து தம்பிராசாவை வெளியே அகற்றுங்கள். ஒரு பொம்பிளை பிள்ளையை பற்றி முகநூலில் எவ்வளவு எழுதுகின்றீர்கள். வெளியே போங்கள்" - என்றார்.

அதற்கு பதிலளித்த தம்பிராசா "நீ இரவு பகலாக ஒரு பொம்பிளையை கொண்டு திரிகிறாய்" - என்றார்.

அதற்கு பதிலளித்த அர்ச்சுனா "நான் ஒன்றைத்தான் கொண்டு திரிகிறேன். நீங்கள் எத்தனையை கொண்டுபோய் வெளிநாடுகளில் கொடுத்தீர்கள் என்று எங்களுக்கு தெரியும். எதற்காக இவரை அழைக்கின்றீர்கள். இவர் ஒரு அழையா நபர். ஆகையால் வெளியே செல்லுங்கள். அமைச்சரே ஓர் அழையா நபரை உள்ளே விட்டு ஏன் பிரச்னையை உருவாக்குகின்றீர்கள். இவர் யார்? என்ன அடிப்படையில் உள்ளே வந்தார்" - என்றார். (அ)

# தேசிய மக்கள் சக்தி அரசை எவராலும் அசைக்கமுடியாது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய கருத்து

கொழும்பு, டிசெ. 27

தேசிய மக்கள் சக்தி அரசு, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் மக்களால் நிறுவப்பட்ட அரசு எனவும் இதை எவராலும் அசைக்க முடியாது எனவே, இந்த அரசு கவிழும் என எதிரணியினர் கனவில் கூட நினைக்கக் கூடாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



அரசாங்கம் குறித்து எதிர்க்கட்சியினர் முன்வைத்து வரும் விமர்சனங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது எமது பிரதான குறிக்கோள்.

ஆளும் தரப்பினரின் கல்வித் தகைமை பற்றி கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சியினர், முதலில் தங்கள் கல்வித் தகைமையைப் பரிசோதிக்க வேண்டும். பொய்களைச் சொல்லி நாம் ஆட்சிக்கு வரவில்லை.

நாம் நேர்மையுடன் நடந்தபடியால் தான் மக்கள் எம்மை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள். மக்களின் அனைத்துப் பிரச்சினை களுக்கும் தீர்வு காண்போம்.

இனிமேல் இன, மத, மொழி ரீதியில் பிரச்னைகள் வர இடமளியோம் - என்றார். (அ)

# திருக்கோவில் கடலில் மூழ்கிய மூவரும் சடலங்களாக மீட்பு!

அம்பாறை, டிசெ. 27

திருக்கோவில் சங்கமன்கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை, சிறுவர்களான மகன், மருமகன் உட்பட 3 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன்கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை மகன் மற்றும் அவரது உறவினரான சிறுவன் உட்பட 3 பேர் கடல் அலையால் இழுத்துச் சென்று காணாமல் போயிருந்த நிலையில் சடலங்கள் நேற்று வியாழக்கிழமை மாலை விநாயகபுரம் மங்கமாரி கடற்கரையில் ஒதுங்கியதையடுத்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில் சங்கமன்கண்டியைச் சேர்ந்த 38 வயதுடைய மயில்வாகனம் நந்தராஜ், அவருடைய 15 வயதுடைய மகன் டினுஜன், மற்றும் நந்தராஜின் சகோதரியின் மகனான 17 வயதுடைய கிரிஷோர் ஆகிய மூவரும் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டனர்.

குறித்து பிரதேசத்தைச் சேர்ந்த மயில்வாகனம் நந்தராஜ் அவரது மகன் சகோதிரியின் மகன் ஆகிய மூவரும் சம்வப தினமான நேற்று முன் தினம் புதன்கிழமை மாலையில் நத்தார் பண்டிகையையிட்டு கடலில் நீராடச் சென்ற நிலையில் கடல் அலையால் இழுத்து செல்லப்பட்டதையடுத்து அவர்களை காப்பாற்ற கடலில் குதித்த தந்தையையும் கடல் அலை இழுத்துச் சென்று காணாமல் போனார்.

இதனை தொடர்ந்து காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் வியாயகபுரம் மங்கமாரி கடல்கரை பகுதியில் நேற்று காலையில் முதலில் 17 வயது சிறுவனின் சடலம் கரை ஒதுங்கியது. இதனையடுத்து சிலமணி நேரத்தின் பின்னர் ஒன்றின் பின் ஒன்றாக இருவரது சடலமும் கரையொதுங்கியதையடுத்து சடலங்கள் மீட்க்கப்பட்டு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட் டுள்ளன. (அ)

## யாழில் நான்கு...

ஆரம்பித்தது. இந்நிலையில் சிகிச்சைக்காக 24ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண் டார். உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## இராணுவ...

உள்ளது. டிப்போவுக்கு பின்னால் இரண்டு ஏக்கர் காணி இராணுவத்தின் வசமுள்ளது. தற்போது பஸ் நிலை யம் அமைந்துள்ள பகுதியில் முன்னாள் அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரனால் மிகப்பெரிய கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவம் தான் இடித்து அழித்தது.

கிளிநொச்சி டிப்போவுக்கு பின்னால் உள்ள காணியின் இரண்டு ஏக்கர் நிலத்தை மாவட்ட செயலகத்தின் ஊடாக பெற்று, இராணுவச் சின்னம் அகற்றப்பட்டு அதில் முன்னாள் அமைச்சர் சந்திரசேகரனின் பெயரில் ஒரு கலாசார மண்டபம் அமைக்கப்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்த நகரப் பகுதிக்குள் இவ்வாறு காணிகள் இராணுவத்துக்கு தேவையில்லை-என்றார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், காணி உரிமை கோருபவர்களது மத்தியில் பல்வேறு குளறுபடிகள் இருக்கின்றன. கிராம சேவகர்கள் உண்மையான காணி உரிமையாளர்களை கண்டுபிடிக்க முடியும் - என்றார். (அ)

## ஊடகவியலாளர்...

கிளிநொச்சி நகரில் நேற்று மாலை இனந்தெரியாத 2 நபர்கள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இவர் பெரும்பாலும் சட்டவிரோத போதைப்பொருள், சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஊடகங்களில் எழுதி வரும் நபராக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

## யாழில்...

எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கையும் மிக தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதால் இந்த எலிக் காச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பிரதமர் ஹரிணிக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு, டிசெ. 27

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், அரசியல் தேவை காரணமாகவே தான் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

துணைவேந்தர் பதவிக்கு தகுதியான அதிகாரியை நியமிப்பதில் நடைமுறை மீறப்பட்டுள்ளதாகவும், இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும் அவர் கூறுகிறார்.

இதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, உயர்கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும்" என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் வைத்தியசாலைகளில் பற்றாக்குறை!

கொழும்பு, டிசெ. 27

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

40 வீதத்துக்கும் அதிகமான அதிகாரிகளுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக அதன் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தால் அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களை சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக நோயாளர்களின் சிகிச்சை மற்றும் பரிசோதனை நடவடிக்கைள் தாமதமடைந்துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

இந்த ஆண்டில் 80 இற்கும் அதிகமான கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதுடன் 41 உயர் டிப்ளோமாதாரிகள் தற்போது தொழில்வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பதாக அவர் கூறினார்.

தற்போது 620 கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சேவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரணிலின் கொள்கையை பின்பற்றிவருகிறது அரசு!

### அஜித் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளை தற்போதைய அரசாங்கம் அவ்வாறே பின்பற்றி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மாற்றியமைக்கப் போவதாக தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் காலங்களில் மக்களுக்கு கூறினர்.

எனினும் மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ஒப்பந்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை பின்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனபோதும் நாணய நிதிய ஒப்பந்தத்தில் கட்டாயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என தேசிய மக்கள் சக்தியின் ஏனைய உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர். இது முரண்பாடான விடயமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுத்த கொள்கையையே தற்போதைய அரசாங்கமும் முன்னெடுக்கிறது. தேர்தலில் வெற்றிபெறுவதற்காக மக்களிடம் பொய் கூறியமை தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது - என்றார். (அ)

*13 ஆவது திருத்தச் சட்டம்*

# தமிழகக் கட்சிகள் மோடிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

### வரதராஜப்பெருமாள் கோரிக்கை

சென்னை, டிசெ. 27

**13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழகக் கட்சிகள் இந்திய பிரதமர் மோடியிடம் கோரிக்கை விடுக்கவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்ததுள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய பயணத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி எவ்வித கருத்துகளை முன்வைத் திருக்கவில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வரதராஜப் பெருமாள் -

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 2015ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்தபோதும், 2023ஆம் ஆண்டு சென்றிருந்த போதும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு பிரதமர் மோடி அழுத்தம் கொடுத்திருந்தார்.

ஆனால், இம்முறை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசப்பட்டதான செய்திகள் எதுவும் இல்லை. இது கவலையளிக்கிறது.

இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகளும், தமிழகத்தில் உள்ள கட்சிகளும் பிரதமர் மோடியிடம் 13ஐ அமுல்படுத்தும் அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க வேண்டும் என கோர வேண்டும்.

1987ஆம் ஆண்டு இந்தியாவின் தலையீட்டின் பிரகாரம்தான் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. எனவே, அதனை முழுமையாக அமுல்படுத்துவதற்கான அழுத்தத்தை இந்தியா கொடுக்க வேண்டும்." என தி இந்து பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார். (அ)

# நவம்பரில் நிலவிய சீரற்ற காலநிலை; 80,000 ஏக்கர் விளைநிலங்கள் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 27

கடந்த நவம்பரில் நிலவிய சீரற்ற வானிலையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த சுமார் 80 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

2024, 25இன் பெரும்போக பயிர் சேத ஆய்வின் முன்னேற்றம் குறித்து இன்று ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2024, 25 பெரும்போகத்தில் 2024 நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களை ஆய்வு செய்யும் பணி தற்போது விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி மற்றும் விவசாயிகள் அமைப்புகளின் பங்களிப்புடன் செய்யப்படுகிறது.

இவற்றில் பொலனறுவை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் சேத ஆய்வு தற்போது நிறைவடைந்துள்ளது.

அந்த மாவட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கைகள் கிடைத்த பின்னர் இழப்பீடுகள் வழங் கப்படும் என இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் 29ஆம் திகதிக்குள் பயிர்ச் சேதங்கள் தொடர்பான ஆய்வுப் பணிகளையும், அநுராதபுரம், குருநாகல், மாத்தளை மாவட்டங்களில் பயிர்ச் சேதங்கள் தொடர்பான ஆய்வுப் பணிகளை டிசம்பர் 30ஆம் திகதிக்குள் முடிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பயிர் இழப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டவுடன், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கணக்குகளில் இழப்பீட்டுத் தொகை வரவு வைக்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு கிடையாது!

கொழும்பு, டிசெ. 27

நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு எதுவும் கிடையாது என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர், விசேட வைத்தியர் மனோஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு மருந்து கையிருப்பு குறித்து அவர் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்குமான மருந்து விநியோகம் சீராக இடம்பெற்று வருகி து. கொரோனா தொற்றுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நிலைமையின் தாக்கம் இன்னும் இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நாட்டின் தேவைக்கு ஏற்ப சில மருந்து வகைகளை முன்கூட்டியே நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். விலைமனு கோரலின்போது பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களை விட பதிவுசெய்யப்படாதவர்களே அதிகமாக ஈடுபாடு காட்டுகின்றனர்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பது கிடையாது. அதனை தவறு என நாம் கூறமாட்டோம். எதிர்வரும் காலத்தில் விலைமனுக்கோரலை முறைப்படுத்துவதற்கு எண்ணியுள்ளோம்.

ஒருசில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சிலர் போலியான பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள். அதில் எந்த வித உண்மையும் கிடையாது-என்றார். (அ)

## வவுனியா மாவட்ட செயலகத்தில் சுனாமி நினைவுதினம் அனுஷ்டிப்பு





வவுனியா, டிசெ. 27

வவுனியா மாவட்ட செயலகத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்தவர்களிற்கு காலை 9.25 - 9.27 வரை இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத்தலைவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளுடன் உயிரிழந்தவர்களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் சுனாமி பேரவலம் தொடர்பாகவும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாகவும் அரச அதிபரின் கருத்துரயும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org